# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.87/2022 | Date | : | 16.03.2023 |
| Deposition of Witness for | : | அ.சா.3 | Taluk | : | Sankari |
| Name | : | வினோத்குமார் | Calling | : | Manager |
| Father/Husband Name | : | Magdish Ram | Religion | : | Hindu |
| Village | : | S.K. Nagar | Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.03.2023.

(1-ம் மற்றும் 2-ம் எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 3-ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

நான் சங்ககிரி எஸ்.கே நகரில் குடியிருந்த சங்ககிரி இந்தியன் வங்கியில் நகை கடன் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.10.2021-ம் தேதி அதிகாலை சுமார் 01.30 மணியளவில் எங்களுடைய வங்கியின் மேலாளர் நிதிஷ்குமார் அவர்கள் எங்கள் வங்கியை சேர்ந்த ATM முன்பாக ஏதோ தவறு நடப்பதாக எனக்கு தொலைபேசியின் மூலம் சொன்னார். உடனே நானும் எங்கள் மேலாளர் நிதிஷ்குமாரும் ATM அலுவலராக இருந்த கவிப்பிரியா அவர்களும், கௌதம் மெடிக்கல் அருகிலிருந்து ATM அறைக்கு சென்றோம். ATM-ன் சட்டர் பாதி அளவில் இறக்கப்பட்ட நிலையில் அறையின் உள்ளே மின் விளக்குகள் ஏதும் எரியாமல் இருந்தது. நாங்கள்அருகே சென்று எங்கள் மொபைல் போனிலிருந்த மின் விளக்கை பயன்டுத்தி ATM அறையை பார்த்தோம். அங்கிருந்த ATM கேஸ் கட்டர் போன்ற கருவியால் உடைக்க முயற்சி செய்யப்பட்டிருந்தது. அங்கிருந்த சி.சி.டி.வி கேமராக்கல் கருப்பு நிற பெயிண்டினால் ஸ்பிரே செய்யப்பட்டிருந்தது. நாங்கள் அனைவரும் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் கவிப்பிரியா அவர்கள் புகார் ஒன்றை எழுதினார். அதில் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU Digitally signed by S R BABU Date: 2023.03.16 17:04:41 +0530

Sd /- Vinothkumar

Judicial Magistrate No.1,
Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.87/2022 | Date | : | 16.03.2023 |
| Deposition of Witness for | : | அ.சா.4 | Taluk | : | Sankari |
| Name | : | சீனிவாசன் | Calling | : | ABM |
| Father/Husband Name | : | C.V.Ananthasumramaniam | Religion | : | Hindu |
| Village | : | Sankari | Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.03.2023.

(1-ம் மற்றும் 2-ம் எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 3-ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

நான் தற்போது சங்ககிரியிலுள்ள இந்தியன் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 17.10.2021-ம் தேதி மதியம் சுமார் 01.45 மணியளவில் கௌதம் மெடிக்கல் அருகிலுள்ள இந்தியன் வங்கி ATM -ல் நடந்த திருட்டு முயற்சி சம்பந்தமாக போலீசார் சம்பவ இடம் வந்து மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். அதில் நானும் முருகேசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் அவருடையது தான் (**பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2023.03.16 17:04:56 +0530

Sd /- Seenivasan

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.87/2022 | Date | : | 16.03.2023 |
| Deposition of Witness for | : | அ.சா.5 | Taluk | : | சங்ககிரி |
| Name | : | முருகேசன் | Calling | : | காசாளர் |
| Father/Husband Name | : | செங்கோடன் | Religion | : | இந்து |
| Village | : | சங்ககிரி | Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.03.2023.

<u>(1-ம் மற்றும் 2-ம் எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 3-ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.)</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சங்ககிரியிலுள்ள இந்தியன் வங்கியில் காசாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 17.10.2021-ம் தேதி மதியம் சுமார் 01.45 மணியளவில் கௌதம் மெடிக்கல் அருகிலுள்ள இந்தியன் வங்கி ATM -ல் நடந்த திருட்டு முயற்சி சம்பந்தமாக போலீசார் சம்பவ இடம் வந்து மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். அதில் நானும் சீனிவாசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் அவருடையது தான். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2023.03.16 17:05:16 +0530

Sd /- Murugesan

Judicial Magistrate No.1,
Sankari.